©
தமிழ்நாடு அரசு
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 33] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 12, 2020
ஆடி 28, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு—2051

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**
**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 39, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (H1)த் துறை, நாள் 21 மார்ச் 2020.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை), அறிவிக்கை புது தில்லி, 13 மார்ச் 2020.**

S.O.1087(E)–1955—ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 2A ஆம் பிரிவின் (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு கோவிட்—19 வைரசால் ஏற்படுகிற தொற்றுகளை தடுப்பதற்காக முகக்கவசங்களின் (அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் 2 அடுக்கு மற்றும் 3 அடுக்கு முகக்கவசங்கள், N 95 முகக்கவசங்கள்) மற்றும் கைகளை சுத்தப்படுத்தும் கிருமிநாசினிகளின் தயாரிப்பு, தரம், விநியோகம், போக்குவரத்து ஆகியவற்றை முறைப்படுத்துவதற்காக பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது, அதாவது:—

**1.** (1) இந்த ஆணை, 2020 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் ஆணை என்று அழைக்கப்படும்.

(2) இந்த ஆணை ***அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**2.** 1955—ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தில் உள்ள அட்டவணையில், தொடர் எண் (7)—க்குப் பின்னர், பின்வரும் இனம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

"(8) முகக்கவசங்கள் (அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் 2 அடுக்கு மற்றும் 3 அடுக்கு முகக்கவசங்கள்,

N 95 முகக்கவசங்கள்) மற்றும் கைகளை சுத்தப்படுத்தும் கிருமிநாசினிகள்".

**3.** இந்த அறிவிக்கை, ***அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து 30—06—2020 ஆம் நாளன்று வரையிலான காலத்திற்கு செயலில் இருக்கும்.

[F.No. S-26/1/2020-ECR&E]

A.K. **சௌதிரி,**
*பொருளாதார ஆலோசகர்.*

**தயானந்த் கட்டாரியா,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*



DTP—II-1 (T-Sup.) (33)

*[அரசாணை (நிலை) எண் 40, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (H1)த் துறை, நாள் 24 மார்ச் 2020.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை), அறிவிக்கை புது தில்லி, 21 மார்ச் 2020.**

S.O.1197(E)–**1955–**ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் **(10/1955)** 3 ஆம் பிரிவு மற்றும் 2A உட்பிரிவில் வழங்கபட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு கோவிட்**–19** வைரசால் ஏற்படுகிற தொற்றுகளை தடுப்பதற்காக 2 அடுக்கு மற்றும் 3 அடுக்கு முகக்கவசங்களின், விலைகள், 2 அடுக்கு மற்றும் 3 அடுக்கு முகக்கவசங்கள் தயாரிப்பதற்கு மூலப் பொருளாக பயன்படுத்தப்படும் உருகாத–நெய்யாத துணி மற்றும் கைகளை சுத்தப்படுத்தும் கிருமிநாசினி ஆகியவற்றின் விலைகளை முறைப்படுத்துவதற்காக பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது, அதாவது:–

**1.** (1) இந்த ஆணை, 2 அடுக்கு மற்றும் 3 அடுக்கு முகக்கவசங்கள் உருகாத–நெய்யாத துணி மற்றும் கைகளை சுத்தப்படுத்தும் கிருமிநாசினி ஆகியவற்றின் விலையை நிர்ணயிப்பதற்கான ஆணை என்று அழைக்கப்படும்.

(2) இந்த ஆணை ***அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**2.** (1) 2 அடுக்கு மற்றும் 3 அடுக்கு முகக்கவசங்கள் தயாரிப்பதற்கு பயன்படும் உருகாத–நெய்யாத துணியின் சில்லறை விலையானது, **13–03–2020** ஆம் நாளுக்கு ஒரு மாதத்திற்கு முந்தைய நாளன்று, அதாவது **12–02–2020** அன்றுள்ளவாறான விலையை விட அதிகமாக இருக்கக்கூடாது.

(2) அறுவை சிகிச்சையின் போது பயன்படுத்தப்படும் 3 அடுக்கு முகக்கவசங்களின் சில்லறை விலையானது, **13–03–2020** ஆம் நாளுக்கு ஒரு மாதத்திற்கு முந்தைய நாளன்று, அதாவது **12–02–2020** அன்றுள்ளவாறான விலையை விட அதிகமாக அல்லது எண்ணிக்கை (Piece) ஒன்றுக்கு ரூ. 10 க்கு அதிகமாக (இவற்றில் எது குறைவானதோ) இருக்கக்கூடாது. 2 அடுக்கு முகக்கவசம் எண்ணிக்கை (Piece) ஒன்றுக்கு ரூ. 8 க்கு அதிகமாக இருக்கக்கூடாது.

(3) 200 மி.லி கொண்ட கைகளை சுத்தப்படுத்தும் கிருமிநாசினி பாட்டில் ஒன்றின் சில்லறை விலையானது ரூ. 100/– மேல் இருக்கக்கூடாது, மற்ற அளவிலான கைகளை சுத்தப்படுத்தும் கிருமிநாசினிகளின் விலை, இந்த விலைகளின் விகிதத்தின்படி நிர்ணயிக்கப்படும்.

**3.** இந்த அறிவிக்கை, ***அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து **30–06–2020** ஆம் நாளன்று வரையிலான காலத்திற்கு செயலில் இருக்கும்.

[F.No. S-26/1/2020-ECR&E]

A.K. **சௌதிரி,**
*பொருளாதார ஆலோசகர்.*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது.)

**தயானந்த் கட்டாரியா,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையர் அவர்களால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.